2014 ஜனவரி 31]

அமைப்பதற்குத் தேவையான கட்டடம் கட்டும் பணி எப்போது நடைபெறும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய கோரிக்கை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு கனிவுடன் பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

5—

அங்கன்வாடி மையக் கட்டடம்

***29895—திரு. கே.பி. பரமசிவம்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், வே. கள்ளிப்பாளையம் ஊராட்சியிலுள்ள வலையபாளையம் மற்றும் அகிலாண்டபுரத்தில் அங்கன்வாடி மையக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், வே. கள்ளிப்பாளையம் கிராம ஊராட்சியில் வலையபாளையம் அங்கன்வாடி மையக் கட்டடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால், அந்த மையம் தற்போது சமுதாய நலக் கூடத்தில் செயல்பட்டு வருகின்றது. அந்தக் கட்டடத்தை இடித்துவிட்டு, புதியதாக கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும்,

[2014 ஜனவரி 31

அகிலாண்டபுரத்தில் முதன்மை அங்கன்வாடி மையம் மற்றும் குறு அங்கன்வாடி மையம் என இரண்டு மையங்கள் இயங்கி வருகின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் இவ்விரு மையங்களுக்கும் கட்டடம் கட்ட நிலம் தேர்வு செய்யப்பட்டு, புதிய கட்டடங்கள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்.

திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லாமை தீர்க்கின்ற இதய தெய்வமாய், இமயமே எதிர்நோக்கும் நாளைய பாரதமாய், 66 ஆவது பிறந்த நாள் காணும் வீரத்தின் விளை நிலமாய், (மேசையைத் தட்டும் ஒலி) வெற்றியின் பிறப்பிடமாய் வாழும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகின்றேன். ஆலயங்கள்தோறும் அன்னதானத் திட்டம் தந்த அட்சயபாத்திரமே, அங்கன்வாடியில் கற்போருக்கு கலவை சாதம் வழங்கிய கலைமகளே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் பல்லடம் தொகுதியில் 214 அங்கன்வாடி மையங்கள் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. இதில், 151 மையங்கள் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. மீதமுள்ள 63 மையங்கள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. இவற்றிற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்,

முற்பகல் 10-30

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிஞ்சுக் குழந்தைகள் கொஞ்சமும் சிரமப்படக்கூடாது என்று, அங்கன்வாடி மையங்களில் உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த, ரூ.96.31 கோடி செலவில் அரசுக் கட்டடங்களில் இயங்கும் 9,873 அங்கன்வாடி

2014 ஜனவரி 31]

மையங்களிலுள்ள சிறிய அளவிலான பழுதுகளையும் மற்றும் பெரிய அளவிலான பழுதுகளையும் நீக்க மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 63 அங்கன்வாடி மையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டுமென்ற கோரிக்கையை இங்கே வைத்திருக்கிறார்கள். இந்த அங்கன்வாடி மையங்களைக் கட்டுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் விருப்புரிமை நிதியிலிருந்தும், சட்டமன்றப் பேரவை உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்தும் கட்டிக்கொள்ளலாம் என்று அரசாணை இருக்கின்றது. ஆகவே, இந்த ஆண்டில் தரப்படக்கூடிய மேம்பாட்டு நிதி முழுவதனையும் பொங்கலூர் வட்டாரத்தில் அங்கன்வாடி மையக் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பயன்படுத்திக்கொள்வதற்கு அவருக்கு விருப்பம் இருந்தால், பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்.

திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து இரண்டு அங்கன்வாடி மையங்களைத்தான் கட்டுகின்ற வாய்ப்பு இருக்கின்றது. 63 அங்கன்வாடி மையங்களைக் கட்டுவதற்கு வாய்ப்பில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு இதனைக் கொண்டுசென்று, பரிசீலனை செய்து, அங்கன்வாடி மையத்திற்குச் சொந்தக் கட்டடம் அமைத்துத் தருமாறு பணிவுடன் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றவாறு, எந்தெந்தப் பகுதிகளில் அவசரமாக அங்கன்வாடி மையங்களுக்குக் கட்டடங்கள் தேவைப்படுகின்றதோ, அந்தப் பகுதிகளில் எல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவர்

தலைமையிலே நியமிக்கப்பட்டிருக்கக்கூடிய குழுவின்மூலம் அதனை ஆய்வு செய்து, அது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

6—

புதிய வகுப்பறைகள்

***32230—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அரசு கலைக் கல்லூரிக்குப் புதிய வகுப்பறைகள் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கல்லூரி அரசுக் கல்லூரியல்ல. அது மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரியாகும். 2012-2013 ஆம் ஆண்டில் அந்தக் கல்லூரியைத் தோற்றுவித்த பெருமை மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். இக்கல்லூரிக்கு நிரந்தரக் கட்டடம் கட்டித் தருவதற்கான பணிகள் அரசின் செயற்குறிப்பில் உள்ளன. அவற்றில் புதிய வகுப்பறைகளும் நிச்சயமாகக் கட்டித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் மூலமாக ஆரம்பிக்கப்பட்ட அந்த உறுப்புக் கல்லூரியில் மாணவர்கள் அமர்ந்து கல்வி பயில்வதற்கு சரியான இடவசதியோ, அடிப்படை வசதிகளோ இல்லாத அவல நிலை இருக்கிறது என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும்.*